செய்தி வெளி எண்: 161

நாள்: 10-04-2017

## பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015 மற்றும் தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (நெறிமுறைப்படுத்தும்) சட்டம் 2014ன் கீழ் அனுமதி பெறாமல் இயங்கிவரும் இல்லங்கள் உடனடியாக குழந்தைகள் இல்லங்களாக இருந்தால் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015 பிரிவு 41ன்கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படவேண்டும், குழந்தைகள் விடுதிகளாக இருந்தால் தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (நெறிமுறைப்படுத்தும்) சட்டம் 2014ன்கீழ் மாவட்ட சமூக நல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவுபெறாமல் இயங்கும் இல்லங்கள் வரும் ஏப்ரல் மாதம் முடிவுக்குள் பதிவு சான்றிதழ் பெற்று தான் இல்லங்கள் இயக்கப்படவேண்டும். அவ்வாறு பதிவு பெறாமல் நடத்தப்படும் இல்லங்கள் மீது இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்-2015 பிரிவு 42ன் கீழ் இல்லங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அபராதம் மற்றும் இல்ல மேலாளர் அவர்களுக்கு சிறைதண்டணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DCPO 31/3/2017

2/2

31/3/17

மாவட்ட ஆட்சியர்/தலைவர்,

காஞ்சிபுரம்.